திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரசிங்கபுரத்திலிருந்து கோடங்கிப்பட்டி வரையில் செல்கிற அந்தச் சாலையில் சுமார் $1\frac{1}{2}$ கிலோ மீட்டர் கோடங்கிப் பட்டி வரையில் மண் சாலையாகவும், அதற்குப் பிறகு பட்டியாக் கவுண்டனூர் வரையில் மெட்டல் சாலையாகவும் உள்ளது. தென் மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவமழை இரண்டும் பெய்கிற அந்தப் பகுதியில், இந்த இரண்டாண்டு காலத்தில் பெய்த மழை யால் சாலைகள் போக்குவரத்துக்கு லாயக்கற்றதாக மாறியிருக் கின்றன. கோடங்கிப்பட்டி கிராமம் மிகவும் தள்ளி உள்ளே இருக்கிற கிராமம். இன்று வரையில் பஸ் வசதி இல்லாத ஒரு கிராமமாக அந்தக் கிராமம் இருந்து வருகிறது. எனவே, அதற்கு தார்ச் சாலை போட்டால், தற்போது ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் ராமபட்டினத்திலிருந்து காவணம் வரையில் செல்கிற அந்தச் சாலை பட்டியாக் கவுண்டனூர் வரை தொட்டு செல்கிற காரணத் தால் அங்கேயுள்ள மக்களுக்கு உதவியாக, அந்த சுற்று வட்டார கிராமங்கள் அனைத்துக்கும் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு பயனுள்ளதாக இருக்கும். சாலை வசதி சரியாக இல்லாத காரணத்தால் இன்றைக்கு புதிய பஸ் விடக்கூடிய வாய்ப்புகூட இல்லாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்க அடுத்த ஆண்டிலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–94 ஆம் ஆண்டில் சுமார் ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தச் சாலை தார்ச்சாலை யாக மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலை யாக மாற்றிக் கொடுக்க ஒப்புதல் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்கு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 472 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

472—

சேரன்மாதேவி தொகுதி கிராமங்களுக்குத் தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கல்.

*12858—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 26]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம் ரெங்கசமுத்திரம் ஊராட்சி. கபாலிபாறை ஊராட்சி. செங்குளம் கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றிய கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

திரு, இரா, புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம். ரெங்கசமுத்திரம் ஊராட்சி, வழுதூர், செங்குளம் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றைச் செயல் படுத்த, கடனா நிதியிலிருந்து அந்தத் திட்டம் நிறைவேற்றப் பட செயற்குறிப்புகள் எல்லாம் முடிந்த நிலையில் இருக்கின்றன.

ஆனால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் பயன்பெற அரை கிலோ மீட்டர் தூரத்தில் வற்றாத தாமிரபரணி ஆறு ஓடுவதால். அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை கடனா நதியிலிருந்து தாமிரபரணி அணைக்கு மாற்றி, அதைச் செயல் படுத்தித் தருவார்களா என அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50,

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி பரிசீலனைச் செய்யப் படும்.

திரு, இரா, புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பல முறை மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் ''டுவார்ட்''—இடமும் நானே நேரடியாகச் சென்று சொன்ன போது கூட, இது முடிந்த நிலையில் இருப்பதால், கடனா நதியிலிருந்துதான் நாங்கள் இதை எடுப்போம் என்று உறுதியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அதன் அருகில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற வற்றாத ஜீவ நதியான தாமிரபரணி ஆற்றிலிருந்து இந்தத் திட்டத்தை எடுத்தால் அந்தப் பகுதி மக்கள் பயன் பெறுவார்கள், மீண்டும் கோடைக் காலங்களில் அந்தக் கிராம மக்களுக்கு தண்ணீர் கிடைக்காத

நிலை வந்துவிடக் கூடிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் போர்க்கால நடவடிக்கையாக எடுத்துச் செய்ய உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து அறிக்கை பெறப்பெற்று இது பற்றி இந்த ஆண்டு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 473, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. பேராசிரியர் க. பொன்னுசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

473—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல்.

*11177—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் பழைய, புதிய கிணறுகள் ஆழப்படுத்த மற்ற கிணறுகளிலிருந்து 450 அடி தூரம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையால் அரசின் மானியக் கடன்கள் வாங்குவதில் விவசாயிகள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அடிக் கணக்கை குறைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுற வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் வங்கி கள், புதிய கிணறு தோண்டுவதற்கும் பழைய கிணற்றை ஆழப் படுத்தவும் கடன் வழங்கும் போது ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையே இருக்க வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச இடைவெளி தூரம் 150 மீட்டர் (492 அடி) ஆகும். இந்த தூரம் தமிழ்நாடு அரசு நில நீர்த்துறையைக் கலந்து இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கும் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.